*கவனிக்க.- 21.09.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1778 - 2012 සැප්තැම්බර් මස 28 වැනි සිකුරාදා - 2012.09.28

*1778 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1204 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1204 |


***கவனிக்க.-*** *இவ்வர்த்தமானியின் பகுதி V இல் 2009 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (யூலை - செத்தெம்பர்) புத்தகப் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2012, ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.*

**பி. கே. எஸ். ரவீந்திர,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

திருத்தம்

### இலங்கை புகையிரத திணைக்களத்தின் ஒப்பந்த அடிப்படையில் உப புகையிரத நிலைய அதிபர்களை சேர்த்துக்கொள்ளல்

இலங்கை புகையிரத திணைக்களத்தின் ஒப்பந்த அடிப்படையில் உப புகையிரத நிலைய அதிபர்களை சேர்த்துக்கொள்வதற்காக 2012.08.24 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விண்ணப்பம் கோரல் அறிவித்தலில் வெற்றிடம் நிலவும் உப புகையிரத நிலையங் களின்கீழ் வனவாசல உப புகையிரத நிலையமும் உள்ளடக்கப்பட் டுள்ளதை இத்தால் அறியத்தருகிறேன். அதன்படி மேற்கூறப்பட்ட பதவிக்கு விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 2012.10.12 ஆந் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறியத்தருகிறேன்.

பி. ஏ. பி. ஆரியரத்ன,
புகையிரத பொது முகாமையாளர்.

புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம்,
கொழும்பு 10.
2012, செத்தெம்பர் 12.

9-1154

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு தொழிற் தகைமை அடிப்படையில் நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2012

2010.09.10 ஆம் திகதிய 1670/33 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை கணக்காளர் சேவை பிரமாணக் குறிப்பின் 7.4 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த கணக்காளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. இதனுடன் இணைத்துள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2012.10.25 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர், "கொழும்பு 01, பொது திறைசேரிக் கட்டிடம், திறைசேரியின் பிரதிச் செயலாளர் (ஏ)" இற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பத்தினை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் முலையில் "இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கான விண்ணப்பம்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

2. **ஆட்சேர்ப்பு முறை**.- தரம் III இல் காணப்படும் வெற்றிடங்களில் 32 இற்குக் கூடாத தொகையினரை நியமிப்பதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்ட உத்தியோகத்தர்களிடம் இருந்து பகிரங்க அறிவித்தல் மூலம் விண்ணப்பங்களைக் கோரி, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சை குழுவொன்றினால் நடாத்தப்படுகின்ற கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை ஒன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்படுவர். விண்ணப்பதாரர்கள் தாம் விரும்பிய ஒரு மொழியில் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற முடியும்.

3. **சேவை நிபந்தனைகள்**.- அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கும், பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2010.09.10 ஆந் திகதிய 1670/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பின் மூலம் விதிக்கப்பட்டுள்ள சேவை நிபந்தனைகள் மற்றும் அதில் செய்யப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் செய்யக் கூடிய நிபந்தனைகளுக்கும் கட்டுப்படும் வகையில் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர். மேலும் பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 07/2007 இன் பிரகாரம் மொழித் தேர்ச்சியினையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

4. நியமனத் தினத்திலிருந்து 03 வருட காலப் பகுதியினுள் 1 ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

**கட்டமைப்பு மற்றும் மாதாந்த சம்பள அளவுத் திட்டம்**.- 2006.04.25 ஆந் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 6/2006 இன் எஸ்.எல். 1-2006 சம்பள அளவுத் திட்டத்தின் பிரகாரம் மாதாந்தச் சம்பள அளவுத் திட்டம் - ரூ. 22,935 – 10X645 – 8X790 – 17X1,050 – ரூ. 53,555 ஆகும்.

(ரூ.24,870 மற்றும் ரூ.26,805 இற்கு முன்னர் வினைத் திறன்காண் தடைகள் இரண்டு உண்டு.)

5. **தொழிற்சார் தகைமைகள்** :

(i) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இறுதிப் பரீட்சை

அல்லது

(ii) பொதுநலவாய நாடு ஒன்றின் பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகம் ஒன்றின் இறுதிப் பரீட்சை

அல்லது

(iii) பொதுநலவாய நாடு ஒன்றின் பட்டயம் பெற்ற முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகம் ஒன்றின் இறுதிப் பரீட்சை

அல்லது

(iv) சான்றிதழ் பெற்ற பட்டயக் கணக்காளர் நிறுவகம் ஒன்றின் இறுதிப் பரீட்சை

அல்லது

(v) ஐக்கிய இராச்சியத்தின் சான்றிதழ் பெற்ற பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

6. **உடல்சார் தகைமைகள்**.- அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றக் கூடியவாறு அனைத்து வழிகளிலும் உடல்சார் தகைமையினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

7. **பிற தகைமைகள்** :

(i) இலங்கைப் பிரஜை ஒருவராக இருத்தல் வேண்டும்.

(ii) சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) யாதேனுமொரு சமயத்தலைவராக பணியாற்றும் எவரும் இது பற்றிய சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.4.3.3 இன் பிரகாரம் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைபெற மாட்டார்.

(iv) தகைமை பெறல்.- விண்ணப்பதாரர் ஒருவர், சேவைக்கு நியமிப்பதற்குத் தேவையான தகைமையினைப் பெற்றுள்ளதாக ஏற்றுக்கொள்வதற்கு மேற்படி தகைமை யினை விண்ணப்பம் கோரும் அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். தகைமையினை உறுதிப்படுத்துவதற்காக சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. **வயதெல்லை**.- விண்ணப்பம் கோரும் அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று 35 வயதிற்கு மேற்படவோ 22 வயதை விடவும் குறையவோ கூடாது.

9. பின்வரும் ஆவணங்களை விண்ணப்பதாரர் ஒருவரினால் விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழின் பிரதி ஒன்று

(ஆ) ஆகக் கூடிய கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகள்

(இ) இரண்டு நற்சான்றிதழ்கள் (இதிலொன்றினை பாடசாலையின் அதிபர்/ பல்கலைக்கழக விரிவுரையாளர் அல்லது பேராசிரியர் ஒருவரிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும்.)

10. கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும் விதம் பின்வருமாறு

| பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படுகின்ற தலைப்புக்கள் | வழங்கப்படும் உச்ச புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|
| தொழில்சார் தகைமைகள் | 50 | |
| கல்வித் தகைமைகள் | 20 | |
| அனுபவம் | 15 | 40 |
| கணனி அறிவு | 10 | |
| நேர்முகப் பரீட்சைகள் குழு | 05 | |
| | 100 | 40 |

11. அரசாங்க சேவை மற்றும் மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவரினால் தமது விண்ணப்பப் படிவத்தின் மூலப் பிரதியினை தமது திணைக்களத் தலைவரின் ஊடாக "திறைசேரியின் பிரதிச் செயலாளர் (ஏ), பொதுத் திறைசேரி, கொழும்பு 01" எனும் முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அதில் மற்றுமொரு பிரதியை விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி தினத்திற்கு முன்னர் நேரடியாகவே அம்முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

12. **விண்ணப்பிக்கும் முறை** :

(அ) விண்ணப்பப்படிவமானது இந்த அறிவித்தலுடன் இணைத்துள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக ஏ4 அளவிலான கடதாசி ஒன்றில் விண்ணப்பதாரரினாலேயே பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பப் படிவத்தில் இலக்கம் 01 முதல் 05 வரையில் முதற் பக்கத்தில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறும் மொழியில் நிரப்புதல் வேண்டும். எவ்வாறாயினும் விண்ணப்பத்தைத் தயாரிக்கும் போது அதன் தலைப்பை ஆங்கில மொழியிலும் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) குறிப்பிட வேண்டியமை கட்டாய மானதாகும்.

(இ) முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படுவதற்கு இடமுண்டு. தபாலில் இடும்போது விண்ணப்பமொன்று காணாமற் போதல் அல்லது தாமதமாதல் தொடர்பாக முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட மாட்டாது.

(ஈ) விண்ணப்பதாரர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யாதேனுமொரு தகவல் அவர் அதனை பிழையானது என தெரிந்து கொண்டே சமர்ப்பித்துள்ளமை கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில், அல்லது யாதேனுமொரு முக்கிய விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருக்கும் பட்சத்தில், நியமனம் பெறுவதற்கு அவர் தகைமையற்றவராக கருதப்படுவதற்கு இடமுண்டு. அரசாங்க சேவைக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் இவ்வாறான ஒன்றினை கண்டுபிடிக்கும் பட்சத்தில் சேவையிலிருந்து வெளியேற்ற முடியும்.

13. நிலவுகின்ற வெற்றிடங்கள் அனைத்தையும் அல்லது அதில் ஒரு பகுதியினை நிரப்புவது பற்றிய இறுதித் தீர்மானம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

14. தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர் ஒருவர் மூன்று வருட தகுதிகாண் காலம் முடிவடைந்ததன் பின்னர் பதவியில் நிரந்தரமாக்கப் படுவதற்கு முன்னர் பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் :-

(i) அரசாங்க நிதி ஒழுங்கு விதிகள்

(ii) சட்டம் மற்றும் முகாமைத்துவம்

(iii) நிருவாகம்

(iv) அறிக்கை எழுதுதல் மற்றும் முகாமைத்துவத்திடம் தகவல்களை சமர்ப்பித்தல்

15. இலங்கை கணக்காளர் சேவைக்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினாலேயே நியமனம் வழங்கப்படும். அவ்வாறு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர். முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் மற்றும் உரிய சிங்களம்/தமிழ் மொழித் தேர்ச்சி பரீட்சையில் சித்தியடைந்துள்ள நிலையில் மேற்படி காலம் முடிவடைந்ததன் பின்னர் சேவையில் நிரந்தரமாக்கப்படுவர்.

16. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிமூலம் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தலை ஒவ்வொரு மொழியிலும் வெளியிடும்போது யாதேனும் வித்தியாசம் காணப்படின் சிங்கள மொழியில் வெளியிடப்படும் அறிவித்தலே வலுப்பெறும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின்
கட்டளையின் பிரகாரம்,

பீ.ஏ. அபேசேகர,
திறைசேரியின் பிரதிச் செயலாளர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
பொதுத் திறைசேரி,
கொழும்பு 01.
2012, செப்தெம்பர் 28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் III இற்கான நியமனம் தொழிற் தகைமை மற்றும் திறமை அடிப்படையில் நேரடி நியமனம் - 2012**

இலக்கம் [ ]
(அலுவலக பயன்பாட்டிற்காக)

நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 1, தமிழ் - 2, ஆங்கிலம் - 3 [ ]

(உரிய இலக்கத்தை பெட்டியினுள் எழுதவும்) மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) Mr./Mrs./Miss. :----.
உ+ம் : Mr. SILVA, A.B.

1.2 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. 2.1 நிரந்தர முகவரி :----.

2.2 அலுவலக முகவரி :----.

(அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் அவரது அலுவலக முகவரியை எழுதுதல் வேண்டும். முகவரியில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படும் பட்சத்தில், அதுபற்றி உடனடியாக அறிவித்தல் வேண்டும்.)

3. 3.1 பிறந்த திகதி :----.

3.2 2012.09.28 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

4. பால் :

| பெண் | ஆண் |
|---|---|

5. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது பற்றி :

| விவாகமானவரா | விவாகமாகாதவரா |
|---|---|

6. மொழித் தேர்ச்சி தொடர்பாக சித்தியடைந்துள்ள உச்ச அளவிலான பரீட்சை :

| (i) சிங்களம் | (ii) தமிழ் | (iii) ஆங்கிலம் |
|---|---|---|
| (1)<br>(2)<br>(3) | | |

7. கல்வி, தொழில்சார் மற்றும் தொழில்நுட்ப தகைமை.– (பெற்றுக் கொண்டுள்ள உயர் பட்டம், திறமை சித்திகள், தொழில்சார் மற்றும் தொழில்நுட்ப தகைமைகள் பற்றிய விபரம், அவற்றினைப் பெற்றுக் கொண்ட திகதி, பட்டத்தில் சிறப்புத் தரம் பெற்றிருப்பின் அது பற்றிய விபரம், தோற்றிய பாடங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பெயர்களைக் குறிப்பிடவும்.) :----.

8. தற்போது புரியும் தொழில் மற்றும் அதற்கு முன்னர் வகித்த சகல பதவிகளும்.- தொழிலில் இணைந்த திகதி, அதிலிருந்து விலகிய திகதி, இறுதியாக பெற்ற வருடாந்த சம்பளம் மற்றும் தொழிலை முடிவுறுத்தியமைக்கான காரணம் என்பவற்றினைக் குறிப்பிடவும்.

| பதவி | இருந்து | வரையில் | வருடாந்தச் சம்பளம் (ரூ.) | சேவையினை முடிவுறுத்தியமைக்கான காரணம் |
|---|---|---|---|---|
| (1)<br>(2)<br>(3)<br>(4)<br>(5) | | | | |

9. நீங்கள் ஏதேனுமொரு குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?

அவ்வாறாயின் திகதி, வழக்கு இலக்கம் என்பவற்றுடன் முழு விபரத்தையும் தரவும் :----.

10. வேறு ஏதேனும் தகவல்கள் இருப்பின் குறிப்பிடவும் :----.

11. நற்சான்றிதழைப் பெற்றுக் கொள்ளும் நபர்கள் தவிர்ந்த உங்களைப் பற்றிய தகவல் அறிந்த நன்கு விசாரிக்கக் கூடிய இரண்டு நபர் களுடைய பெயர் மற்றும் முகவரி என்பவற்றினை குறிப்பிடவும் :

(1) ..............................................................................................
(2) ..............................................................................................

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையிலும் மற்றும் எனது நம்பிக்கையின் பிரகாரமும் உண்மையானவை என இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதில் காணப்படும் தகவல்களில் ஏதும் பொய்யானவை அல்லது பிழையானவை என கண்டுபிடிக்கப்

படும் பட்சத்தில் நான் தகுதியற்றவனாவதற்கும், எனக்கு எதுவித நஷ்டஈடும் வழங்காது என்னை சேவையில் இருந்து அகற்றுவதற்கும் உட்படுவதனை நான் அறிந்து வைத்துள்ளேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

***திணைக்களத் தலைவரின் சான்றிதழ்***

*விண்ணப்பதாரர் அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் பட்சத்தில் அவர் பற்றிய திணைக்களத் தலைவரின் சிபாரிசு–*

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி ............................................ அவர்கள் .................... ஆந் திகதி முதல் ............................................ அலுவலகத்தில் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவராக / மாகாண அரசாங்க உத்தியோகத்தர் ஒருவராக சேவையாற்றுகிறார் எனவும், அவரது வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானதாக அமைந்துள்ளன எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவி முத்திரை :----.

திகதி :----.

*9-1231*

---

## இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2012

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பின் உத்தியோகத்தர் களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2013 ஆண்டு தை மாதம் கொழும்பில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கிறேன்.

2. இப்பரீட்சைக்குரிய பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் 2002.03.01 ஆந் திகதிய 1225/32 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. வசதிக்காக இப்பாட விதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**பரீட்சை ஒழுங்குவிதிகள் :**

(அ) முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் கீழ்க்குறிப்பிடப்பட்ட பாடங்கள் உள்ளடங்குகின்றன :-

| | |
|---|---|
| பாட இலக்கம் 1 | பொது நிர்வாகம்.- இலங்கை அரசியல் யாப்பு, தாபன விதிக்கோவையின் ஒழுங்கு விதிகள், அரசின் ஏனைய விதிமுறைகள் |
| பாட இலக்கம் 2 | நிதி |
| பாட இலக்கம் 3 | கல்வி, கல்விச்சட்டம், நிர்வாகம் மற்றும் மேற்பார்வை |

(ஆ) உத்தியோகத்தருக்கு முதலாவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சைக்குரிய பாடங்களுக்காக ஒரே தடவையில் அல்லது வெவ்வேறான சந்தர்ப்பங்களில் தோற்ற முடியும்.

(இ) ஒவ்வொரு வினாப்பபடிவங்களுக்குமான நேரம் மூன்று மணித்தியாலங்களாகும்.

**3. பாடவிதானம் :**

(1) *பொது நிர்வாகம் :*

(அ) இலங்கை (யாப்பு) அரச கட்டளை 1946 மற்றும் 1947 (973 ஆவது வாசகம்)
1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க குடியுரிமைச் சட்டம் (349 ஆவது வாசகம்)
1972 ஆம் ஆண்டின் மே 22 ஆந் திகதி விதித்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் யாப்பு
1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கம் கொண்ட வாக்காளர்களை பதிவுசெய்யும் சட்டம்
1981 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல் சட்டம்
1981 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கருத்துக் கணிப்பீட்டுச் சட்டம்
1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான சட்டம்
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பு

(ஆ) அலுவலக மற்றும் துறைசார் ஒழுங்கமைப்பு திட்டம், தாபன விதிக்கோவையின் ஒழுங்குவிதிகள் மற்றும் அரசின் ஏனைய ஒழுங்குவிதிகள்
தாபனவிதிக்கோவையின் வாசகங்கள்
I, II, III, IV, V, VI, VII, IX, X, XI, XVI, XXV, XXVI, XXVII, XXIX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII

(2) *நிதி :*

(அ) அரச நிதிப் பிரமாணத்தின் 1 ஆம் பகுதி (1 ஆவது வாசகத்தைத் தவிர)

(ஆ) நடைமுறை ஆண்டின் வருமானம் மற்றும் செலவின மதிப்பீடு (உ-ம்) அவற்றின் தயாரிப்புகள், வருமானத் தலைப்பு, நிதி மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டம்

(இ) கல்வி அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படும் கணக்குப் பணிகளுக்கு உரியதான கட்டளைச் சட்டங்கள் மற்றும் ஏனைய சட்டக் கொள்கைகள்

(3) *கல்வி, கல்விச் சட்டம், நிர்வாகம் மற்றும் மேற்பார்வை :*

(அ) *கல்விச் சட்டம் :*
பரீட்சார்த்திகள் கீழே குறிப்பிடப்பட்ட கட்டளைச் சட்டங்கள் மற்றும் பாராளுமன்றச் சட்டங்கள் தொடர்பான அறிவு மற்றும் விளக்கத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் :

* 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க கல்விக் கட்டளைச் சட்டம்
* 1947 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க திருத்தப்பட்ட கட்டளைச் சட்டம்

* 1951 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க திருத்தச் சட்டம்
* 1953 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க திருத்தச் சட்டம்
* அரச பாடசாலைகள் தொடர்பான பிரமாணக் குறிப்பு
* 1960 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி (விசேட ஒழுங்குவிதிகள் திருத்தல்) சட்டம்
* 1961 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி (மேலதிக ஒழுங்குவிதிகள்) சட்டம்
* 1973 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கல்வி (பதவிப்பெயரை மாற்றி அமைத்தல்) சட்டம்
* 1979 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க பிரிவெனாச் சட்டம்
* 1981 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி (விசேட ஒழுங்குவிதிகள்-திருத்தல்) சட்டம்
* 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவகச் சட்டம்

(ஆ) கல்வி நிருவாகம் :

(1) கல்வி அமைச்சின் கொள்கைகள் :

(i) கல்வி அமைச்சு
(ii) மாவட்டத் திணைக்களம் உட்பட அமைச்சுக்களின் கீழுள்ள திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் கல்வி அமைச்சின் கட்டமைப்பும் செயற்பாடுகளும்
(iii) தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் கல்வித் திட்டமிடலின் நோக்கம், திட்டங்களை (பாடசாலைத் திட்டமிடல்கள் உட்பட) அமுல்படுத்தல் போன்றன

(2) பாடசாலை முகாமைத்துவம், பாடசாலை சமூக தொடர்பாடல்கள்
(3) கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை
(4) விசேட கல்வி வேலைத்திட்டங்கள்

(இ) கல்வி மேற்பார்வை :

* பாடசாலை மேற்பார்வைக்கான திட்டங்கள் மற்றும் ஆசிரியர்களின் செயற்சாதனை மதிப்பீட்டுக்காகப் பயன்படுத்தப்படும் அனுமானங்கள்
* பாடசாலையில் தொடர்ச்சியான மதிப்பீட்டு வேலைத்திட்டங்கள்
* பாடசாலைகளின் சுயமதிப்பீட்டு வேலைத் திட்டங்கள்
* மாவட்டம், திணைக்களம் மற்றும் கல்வி அமைச்சினால் பாடசாலை மேற்பார்வைகள்
* வெளிக்குழுக்கள் மூலம் உள்ளக மதிப்பீட்டு மேற்பார்வைகள்

(கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள், கையேடுகள் மற்றும் ஏனைய வெளியீடுகள் தொடர்பாக விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு பரீட்சார்த்திகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது.)

பரிந்துரை செய்யப்பட்டுள்ள நூல்கள் மற்றும் வெளியீடுகள் :

* கல்வித் திட்டமிடல் மற்றும் நிர்வாகம் தொடர்பான ஆசிய நிறுவனம் (1970)
* கல்வி நிர்வாகம் தொடர்பான முகாமைத்துவ கலைமுறைகள்
* கருத்தரங்கு அறிக்கைகள் - புதுடில்லி
* பரி மற்றும் டை (1975) பாடசாலையை நடாத்துதல்-டெம்பிள் ஸ்மித், லண்டன்
* புஷ் டீ கிளேட்டர், ஆர். குட் மற்றும் சீ றிசர்ஸ் (1980) பாடசாலை
* முகாமைத்துவ ஒழுங்குவிதிகள் காப்பர் மற்றும் றோ
* கலாநிதி கான் முகைதீன் செரீப் (1989)
* பாடசாலை நிர்வாகம் (புதுடில்லி)
* கல்வி அமைச்சின் இலங்கைக் கல்வி (1969)
* கல்வி மற்றும் கலாச்சார பணிகள் அமைச்சின் நூற்றாண்டுக் குழு II ஆவது மற்றும் III ஆவது பகுதி
* திறந்த பல்கலைக்கழகம் (1981) பாடசாலைகளின் கொள்கை வகுப்பு ஒழுங்குவிதிகள் மற்றும் தலைமைத்துவம் (ஈ 323 பாடநெறியின் 4 ஆவது பகுதி), திறந்த பல்கலைக்கழக யுனிவர்சிட்டி பிறஸ், லண்டன்
* சிப்மன், மார்டன் (1983) பாடசாலை மதிப்பீடு கய்ஸ்மன் கல்வி நூல் லண்டன், கல்வி அமைச்சின் முகாமைத்துவ மறுசீரமைப்புத் தொடர்பான அறிக்கை - 1984

4. சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடங்களில் 40% புள்ளிகள் வீதம் பரீட்சார்த்தியினால் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

5. **பரீட்சை மொழிமூலம்** :

(i) பரீட்சார்த்தி அரச கரும மொழி அல்லது தேசிய மொழி மூலம் பதிலளிக்க முடியும்.

(ii) பரீட்சார்த்தி அரச சேவையில் இணைந்துகொள்வதற்காக தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழி மூலமோ அல்லது போட்டிப் பரீட்சை இன்றி அரச சேவைக்கு இணைந்தவர்கள் தொடர்பாக அரச சேவைக்கு இணைவதற்கு தகைமைபெற்ற மொழி மூலமாகப் பதிலளிக்க வேண்டும்.

6. பரீட்சார்த்தி தமக்குரியதல்லாத மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றியதாகத் தெரியவரும் பட்சத்தில் அவரின் பரீட்சார்த்தி தன்மை இரத்துச்செய்யப்படும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் மொழியைப் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்பட மாட்டாது.

7. கீழ்க்குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய ஏ4 அளவு கடதாசியில் விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 1 தொடக்கம் 6 வரையான

வினாக்கள் 1 ஆம் பக்கத்திலும் எஞ்சியவை 2 ஆம் பக்கத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.) சிங்கள விண்ணப்பப்படிவத்தில் பரீட்சையின் பெயர் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழி மூலமும், தமிழ் விண்ணப்பப்படிவத்தில் பரீட்சையின் பெயர் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படுதல் வேண்டும். உரிய தகவல்களை தமது கையெழுத்தினால் தெளிவாகப் பூரணப்படுத்த வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பங்கள் மற்றும் முறையாகப் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவத்தின் போட்டோப் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரியால் விளக்கம் பெறவேண்டியதுடன் அன்றேல் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதனையும் கருத்திற்கொள்ளவும்.

8. பரீட்சையானது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துவதற்காக அவரினால் விதிக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளைப் பின்பற்ற பரீட்சார்த்தி கட்டுப்பட்டுள்ளார். பரீட்சை தொடர்பான சட்டவொழுங்குகள் இவ்வறிவித்தலில் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

9. விண்ணப்பப்படிவம், 2012.10.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர், ''பரீட்சை ஆணையாளர், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை'' என்ற முகவரிக்கு திணைக்களத் தலைவரினால் பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். இக்குறித்த தினத்திற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. விண்ணப்பதாரிக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரமாகி இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காத பட்சத்தில் பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தாங்கள் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோப் பிரதியையும் உறுதிசெய்யப்பட்ட பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு வெளிப்பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்தையும் அதனுடன் வைத்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது பயன்மிக்கதாகும் :- தொலைநகல் இல. : 011-2784232.

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;
(iii) பரீட்சார்த்தியின் முகவரி ;
(iv) விண்ணப்பப்படிவம் தபாலிட்ட திகதி, பதிவிலக்கம் மற்றும் தபால் அலுவலகம்.

11. மேலே (09) ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை நிவர்த்திசெய்யத் தவறும் பட்சத்தில் பரீட்சார்த்தியால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

12. பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகளைச் சமர்ப்பிப்பது பரீட்சார்த்தியின் பொறுப்பாக இருப்பதுடன் அதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

13. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தியிடமிருந்து பரீட்சைக் கட்டணத்தை அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ''உரிய பரீட்சைக் கட்டணம், பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இல் வைப்புச் செய்யக்கூடியவாறு நாடெங்கும் அமைந்துள்ள எந்தவொரு மாவட்ட அல்லது பிரதேச செயலகத்திலும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவும். (பற்றுச்சீட்டின் பிரதியைத் தாங்கள் வைத்திருப்பது பயன்மிக்கதாகும்)''.

(அ) முதல் தடவைக்கு (முழுமையான பரீட்சை அல்லது ஒரு பகுதிக்கு கட்டணம் அறவிடப்பட மாட்டாது.)

(ஆ) அதற்குப் பின்னர் ஒவ்வொரு தடவைக்காகவும்-

| | ரூபா |
|---|---|
| முழுமையான பரீட்சைக்காக | 1,000 |
| ஒரு பாடத்திற்கு | 500 |

14. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்ற சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளதாக கருத்திற்கொண்டல்ல என்பதனைக் கவனத்தில்கொள்ள வேண்டும்.

எஸ். எம். கோட்டாபய ஜயரத்ன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
பெலவத்தை,
பத்தரமுல்லை.
2012.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை கல்வி நிருவாக சேவையின் III ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2012**

First Efficiency Bar Examination For Officers in Class III of The Sri Lanka Education Administrative Service

☐
(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

(பத்தரமுல்லை, பெலவத்தை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு திணைக்களத் தலைவர் ஊடாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்)

உத்தியோகத்தர் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

(பரீட்சையின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.)

1. (அ) முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :
உதாரணம் : SILVA, S. A :----.

(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2. (i) அலுவலக முகவரி :----.
(ii) தனிப்பட்ட முகவரி :----.
(iii) பரீட்சை அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

3. அறிவித்தலின் (02) ஆவது வாசகத்தின் பிரிவு (அ) இன்கீழ் குறிப் பிடப்பட்டுள்ள பாடங்களில் தோற்றும் பாடங்கள் தொடர்பாக தெளிவாகக் குறிப்பிடவும்.

பாட இலக்கம் [ | ] பாடம் :----.

பாட இலக்கம் [ | ] பாடம் :----.

பாட இலக்கம் [ | ] பாடம் :----.

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :
[ | | | | | | | | | ]

5. பிறந்த திகதி : [ | | | ] [ | ] [ | ]

6. (i) பதவிப்பெயர் :----.

(ii) திணைக்களம்/வலயக்கல்வி அலுவலகம்/கோட்டக்கல்வி அலுவலகம்/பாடசாலை :----.

7. இப்பரீட்சைக்கு முன்னர் முழுமையாக அல்லது பகுதியாகத் தோற்றியிருப்பின் அவ்வாறு தோற்றிய ஆண்டு, பாடம் மற்றும் மொழியைக் குறிப்பிடவும் :

| ஆண்டு | பாடம் | மொழிமூலம் |
|---|---|---|
| ..................... | ..................... | ..................... |
| ..................... | ..................... | ..................... |
| ..................... | ..................... | ..................... |

8. மேற்கூறப்பட்ட விபரங்கள் உண்மையானது என்றும் மேலே (06) ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற உரிமை உண்டென்றும் பரீட்சை தொடர்பான சகல சட்ட ஒழுங்குகளுக்கும் இணங்குவதாகவும் தெரிவிக்கிறேன். மேலும் பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்குக் கட்டுப்படுவதாகவும் தெரிவிக்கிறேன்.

9. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டபற்றுச்சீட்டின் விபரங்கள் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகத்தின் பெயர் : ----.
(ii) பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய பணத்தொகை :----.

> பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை ஒட்டவும்.
> (போட்டோ பிரதியை வைத்திருக்கவும். உரியதாயின் மாத்திரம்)

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,

சமர்ப்பிக்கிறேன்.

இவ்விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற தகைமை பெற்றுள்ளதாகவும் 6 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற அவர் தகைமை பெற்றுள்ளதாகவும் இத்தால் சான்றுபடுத்துகிறேன்.

பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு மேலே ஒட்டப்பட்டுள்ள தாகவும் சான்றுபடுத்துகிறேன். (*)

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்,

பதவிப்பெயர் :----.
பதவி முத்திரை :----.
திகதி :----.

(*) கட்டணம் செலுத்த அவசியமற்றிருப்பின் இரத்துச் செய்யவும்.

9-723

---

பதிவாளர் நாயகம் திணைக்களம்

## பதிவாளர் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012

## REGISTRAR GENERAL DEPARTMENT

## Open Competitive Examination for Class III Grade II of the Registrar Service - 2012

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பதிவாளர் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன.

2. 2013, சனவரி மாதம் பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்படும் பரீட்சை பெறுபேறுகளுக்கிணங்க கூடிய புள்ளிகளைப் பெறும் பரீட்சையாளர்கள் இப்பதவிகளுக்காக சேர்த்துக்கொள்ளப்படுவர். இப்பரீட்சை கீழ்க்காணப்படும் நகரங்களில் நடாத்தப்படும். அந்நகரங்கள் மற்றும் நகரங்களுக்குரிய நகர இலக்கங்கள் கீழ்க்காணப்படுகின்றன. போதுமானளவு பரீட்சார்த்திகள் இல்லாதவிடத்து அல்லது வேறு காரணங்களினால் அல்லது ஏதாவது பரீட்சை நிலையத்தினை இரத்துச்செய்து பரீட்சார்த்தியின் இரண்டாவது விருப்பின் பிரகாரம் பரீட்சை நிலையத்தினை தீர்மானிக்கும் எண்ணம் பரீட்சை ஆணையாள ருக்கு உரியது.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 05 |
| காலி | 07 |
| யாழ்ப்பாணம் | 10 |
| அம்பாறை | 16 |
| அநுராதபுரம் | 19 |
| பதுளை | 21 |
| இரத்தினபுரி | 24 |

இப்பரீட்சையினை ஒத்திப்போடுவதற்கு அல்லது இரத்துச்செய்வதற்கு திணைக்கள தலைவருக்கு அதிகாரம் உண்டு.

3. **சேவை நிபந்தனைகள்**.- அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளும் இங்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அமைவாக பதிவாளர் சேவை III ஆம் வகுப்பின் II ஆம் தர பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்படும் :-

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்தானது மாகும். தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையினை செலுத்துதல் வேண்டும்.

(ii) தாபன விதிக்கோவை, நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரச சேவையின் பொது நிபந்தனைகளுக்கும், இதுவரை வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகள் காலத்துக்குக்காலம் வழங்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்படல் வேண்டும். அவ்வாறே தாபனக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 தொடக்கம் 12 வரையான பிரிவுகளுக்கும் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரச சேவை ஆணைக் குழுவின் அலுவலக நடவடிக்கையின் ஒழுங்குமுறையின் 1 ஆவது காண்டத்தின் அத்தியாயத்திற்கும் உட்படல் வேண்டும்.

(iii) சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் அலுவலர்கள் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு பயிற்சிக்கு உட்படல் வேண்டும்.

(iv) அரச சேவைக்குப் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்படும் அலுவலர்கள் மூன்று (03) வருடங்கள் தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர்.

(v) அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் ஒரு வருடம் பூர்த்தியாகும் வரை பதில் சேவை அடிப்படையில் நியமனம் செய்யப்படுவர்.

(vi) பதவியில் நியமனம் பெற்று மூன்று வருடங்கள் முடிவதற்குள் பதிவாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்படும் தாபனத்தி னால் நடாத்தப்படும் வினைத்திறன்காண் தடை எழுத்துப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும். வயதினை அடிப்படை யாகக் கொண்டு வினைத்திறன்காண் தடையில் விடுப்பு வழங்கப்பட மாட்டாது.

(vii) பதவியில் நிரந்தரப்படுத்தப்பட்டதன் பின் அரச சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட அலுவலர்களின் முன்னைய சேவையின் அங்கத்துவம் முடிவுறுவதோடு. அச்சேவைக்கு மீள திரும்புவதற்கான உரித்து இல்லாது போகும்.

4. **சம்பளத் திட்டம்**.- எம்என்-5-2006(ஏ)- ரூபா 16,720-10 x 320-11 x 365-15 x 450- ரூபா 30,685. 6/2006 (iv) சுற்றுநிருபம்

5. **வயதெல்லை**.- வயது 21 வருடங்களுக்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

6. **கல்வித் தகைமைகள்**.- 2012.09.28 ஆந் திகதிக்கு கீழ்க்காணப் படும் தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் :

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் சிறந்த நடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையின் அனைத்து பிரதேசங்களிலும் கடமை புரிவதற்கும் பதவியின் கடமையினை நிறைவேற்றுவதற்கான சிறந்த தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் பட்டதாரியாக இருத்தல்.

அல்லது

(iii) சட்டக் கல்லூரியினால் நடாத்தப்படும் இறுதி சட்டப் பரீட்சையில் சித்திபெற்று உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த சட்டத்தரணியாக இருத்தல்.

7. **சேர்த்துக்கொள்ளப்படும் முறை**.- விண்ணப்பத்தினைக் கோரி தகைமைகளினை உடைய விண்ணப்பதாரர்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சையின் பெறுபேறு களுக்கிணங்க சேர்த்துக்கொள்ளப்படுவர். பரீட்சையில் வெற்றிபெறு வதற்காக ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% அல்லது அதற்கு மேற்பட்டதாக புள்ளிகளைப் பெறல் வேண்டும். அவ்வாறு பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரர்களை தெரிவுசெய்து, அவர்களின் அப்புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கு இணங்க, மேலதிக புள்ளிகளைப் பெற்றவர்கள் ஒழுங்குமுறையில் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். சான்றிதழ்களை பரிசீலனை செய்தலுக்காக மட்டுமே சாதாரண நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

8. **பரீட்சைக் கட்டணங்கள்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 750 ஆகும்.

இப்பரீட்சைக் கட்டணம் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னதாக மாவட்ட/ பிரதேச செயலகத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன்கீழ் வைப்பிலிட்டு விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். இப்பரீட்சைக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்படாது. பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். இப்பரீட்சைக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின் போட்டோ பிரதியினை தன்வசம் வைத்துக்கொள்ளல் பிரயோசனமானது.

9. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பப்படிவமானது, இவ்வறிவித்தலில் குறிப்பிடப் பட்டிருக்கும் மாதிரிப் படிவத்திற்கு இணங்கியதாக இருத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சையின் பெயர், சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் இடவும். அதனை கடதாசியின் இரு பக்கத்தினையும் உபயோகித்து, 8 1/2" x 12" விசாலமுடைய கடதாசியில் தயாரிக்குக. மாதிரி விண்ணப்பப்படிவத்தின் விடயங்கள் 1 தொடக்கம் 7 வரை முதலாவது பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாவது பக்கத்திலும்

தயாரிக்குக. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு பொருந்தாத விண்ணப்பப்படிவங்கள், பூரணமற்ற தகவல்கள் அடங்கிய விண்ணப்பப் படிவங்கள் தகவல் அளிக்காமல் இரத்துச்செய்யப்படும். அவ்வாறே பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதா என விண்ணப்பதாரர் விசாரித்து அறிந்துகொள்வதோடு, அவ்வாறு இன்றேல் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் என மேலும் தெரிவித்துக்கொள்கின்றேன். விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியினை தம்வசம் வைத்துக் கொள்ளல் பிரயோசனமானது.

(ஆ) விண்ணப்பப்படிவத்தினை பூரணப்படுத்தல், விண்ணப்பதாரர் தாம் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமைபெற்ற மொழியிலேயே இருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவங்கள் 2012.10.30 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர், பதிவுத்தபாலில் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்னும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் இடப்பட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பதிவாளர் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012" என தெளிவாக குறிப்பிடல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**குறிப்பு**.- அரசாங்க சேவையில்/மாகாண சேவையில் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் தங்களது திணைக்கள தலைவரினூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

(ஈ) அனைத்து வகைகளிலும் பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் இடுகையில் விண்ணப்பப் படிவங்கள் காணாமல் போதல் அல்லது தாமதித்தல் சம்பந்தமாக செய்யப்படும் எந்தவொரு முறையீடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(உ) விண்ணப்பப்படிவங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி, உரிய விதத்தில் விண்ணப்பத்தினைப் பூர்த்திசெய்து, உரிய தினத்திற்கு முன்னர் அனுப்பப்படும் அனைத்து விண்ணப்ப தாரர்களுக்கும் அனுமதி அட்டைகள், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் தபால் மூலம் அனுப்பப்படும். அத்துடன் அதுபற்றிய அறிவித்தல் பத்திரிகை அறிவித்தல் பத்திரிகைகளில் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப் பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னர் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாவிடில் அறிவித்தலில் குறிப்பிடப் பட்ட விதத்தில் அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அறிவித்தல் வேண்டும். தங்களிடம் வைத்துக்கொண்ட விண்ணப்பப் படிவம் மற்றும் பணத்தினை செலுத்திப்பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் போட்டோ பிரதிகளும், பதிவுத்தபாலின் பற்றுச்சீட்டினையும் கொழும்புக்கு வெளியில் உள்ள பிரதேசத்திலாயின் பெக்ஸ் இலக்கத்தினைக் குறிப்பிட்டு தங்களது வேண்டுகோள் கடிதத்தினை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்புதல் கூடிய பொருத்தமானதாகும்.

10. **பரீட்சை நிலையத்திற்குள் உட்புகுதல்**.- (i) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள், பரீட்சை நிலையத்தின் நிர்வாகியிடம் தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய பிரவேசப் பத்திரத்தினை சமர்ப்பித்தல் வேண்டும். தனது பிரவேசப்பத்திரத் தினைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக் கப்பட மாட்டாது.

(ii) அனைத்து பரீட்சார்த்திகளும் தனக்கென ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அனைத்து பரீட்சார்த்திகளும் பரீட்சையாளர்களால் கடைப்பிடிக்க வேண்டிய பொது சட்டதிட்டங்களுக்கு உட்படல் வேண்டும்.

(iii) பரீட்சார்த்திக்கு பிரவேசப்பத்திரத்தினை வழங்கல், அவர் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகக் கருதப்படக் கூடாது.

11. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- தான் தோற்றும் அனைத்துப் பாடங்கள் சம்பந்தமாக பரீட்சை நிலைய நிருவாகி திருப்திப்படும் விதத்தில் தனது அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். அது சம்பந்தமாக கீழ்க்குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை ;

(ii) வழங்கப்பட்ட திகதி, பரீட்சை நடாத்தப்படும் திகதிக்கு 3 வருடங்களுக்கு மேற்படாதவாறாக செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு.

12. **உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்குதல்**.- (அ) பரீட்சார்த்தி தகைமையற்றவராக தெளிவாகினால், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடாத்தப்படும் காலப்பகுதியில் அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்த தகைமையினை இரத்துச்செய்வதற்கு இடமுண்டு.

(ஆ) பரீட்சை நடாத்தப்படல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணை யாளர் நாயகம் மூலம் மேற்கொள்ளப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்தி உட்படல் வேண்டும். அச்சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மூலம் மேற்கொள்ளப்படும் தண்டனைக்கு அவர் கட்டுப்படல் வேண்டும்.

13. இவ்வொழுங்கு விதிகளில் ஏற்பாடு செய்யப்படாத விடயங்கள் சம்பந்தமாக அரச சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

14. **பரீட்சை நடைமுறைகள் :**

(i) மொழி மூலம்-

(அ) சிங்கள மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளில் ஒரு மொழியில் விண்ணப்பிக்க முடியும்.

(ஆ) அனைத்து விண்ணப்பதாரர்களும், விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மொழி மூலத்திலேயே அனைத்து வினாத்தாள்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(இ) தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது.

(ii) *பாடங்களும் அது தொடர்பான விபரங்களும்.-* பரீட்சையானது, கீழ்க்காணப்படும் விடயங்கள் சம்பந்தமான எழுத்து மூல வினாப்பத்திரங்களை உள்ளடக்கியதாகும் :

| விடயம் | விடய இலக்கம் | கால அளவு | அதி கூடிய புள்ளிகள் | சித்திக்கான புள்ளிகள் |
|---|---|---|---|---|
| நுண்ணறிவு | 1 | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| பொது அறிவு | 2 | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| மொழியும் கட்டுரையும் | 3 | 1 மணித்தியாலம் | 100 | 40 |

**விடய விபரங்கள் :**

| வினாத்தாள் | விடய விபரங்கள் |
|---|---|
| *நுண்ணறிவு.-* வினாத்தாள்கள் பல்வகை மற்றும் சுருக்கமான வினாக்களுடன் கூடிய 50 வினாக்களைக் கொண்டது. | பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியாக ஆராயும் திறன் மற்றும் வாய்மொழி மூலமல்லாத விடயத்துடன் தொடர்புபட்டதான தகவல்கள் பற்றிய ஆற்றல் மற்றும் நுண்ணறிவினை பரிசீலிக்கும் நோக்கத்துடன் தயாரிக்கப்படும் வினாப்பத்திரங்கள். |
| *பொது அறிவு.-* வினாத்தாள்கள் பல்வகை மற்றும் சுருக்கமான வினாக்களுடன் கூடிய 50 வினாக்களைக் கொண்டது. வினாக்கள் அனைத்திற்கும் விடையளிக்க வேண்டும். | இலங்கையின் சமூக மற்றும் கலாச்சார முறைகள் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களுடன் விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப முன்னேற்றம் சம்பந்தமான பரீட்சார்த்தியின் பொது அறிவினைப் பரீட்சிப்பதற்கான வினாப்பத்திரம். |
| *மொழியும் கட்டுரையும்.-* வினாத்தாள்கள் கட்டமைப்பு மற்றும் சுருக்கமான வினாக்களுடன் கூடியது. வினாக்கள் அனைத்திற்கும் விடையளித்தல் வேண்டும். | தரப்படும் தலைப்பு மற்றும் கருப்பொருளின் கருத்து மற்றும் தகவல்களினை சமர்ப்பித்தல், கோவையிடல் மற்றும் தகவல் பரிமாற்றம் சம்பந்தமாக பரீட்சார்த்தியின் அறிவைச் சோதித்தல். |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை.
2012.09.28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

பதிவாளர் நாயகம் திணைக்களம்

**பதிவாளர் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012**

Registrar General Department

Open Competitive Examination for Class III Grade II of the Registrar Service - 2012

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

பரீட்சைக்குத் தோற்றுவதற்கான மொழிமூலம் :
(சிங்களம்-2/தமிழ்-3)
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்.)

* வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்ற எதிர்பார்க்கும் நகரம் மற்றும் மாவட்டத்தின் இலக்கத்தினைக் குறிப்பிடவும்.

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |

1. (i) முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
உதாரணம் : SILVA, A. S.
(ii) முதல் எழுத்துக்கள் குறிக்கும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

2. முழு முகவரி :
(i) நிரந்தர வதிவிட முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
(ii) நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
(iii) அனுமதி அட்டை அனுப்பப்படவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

3. பால் :
பெண்-1, ஆண்-0
(கூட்டினுள் உரிய இலக்கத்தினை இடவும்)

4. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :
விவாகமானவர் -1
விவாகமாகாதவர் -2
(கூட்டினுள் உரிய இலக்கத்தினை இடவும்)

5. அடையாள அட்டை இலக்கம் :

6. (i) பிறந்த திகதி :
ஆண்டு மாதம் திகதி
(ii) ...................... ஆந் திகதியன்று வயது-
வருடங்கள் மாதங்கள் நாட்கள்

7. பரீட்சைக்குத் தோற்றுவதற்காக தாங்கள் தகைமை பெற்ற பரீட்சை அறிவித்தலின் எந்த பந்தியின்கீழ் என்பது-

6 (ii) அல்லது 6 (iii) :----.

7.1 6 (ii) பந்திக்கு கீழாயின்,
பெற்ற பட்டம் :----.
தகைமையைப் பூர்த்திசெய்த திகதி :----.

6 (iii) பந்திக்கு கீழாயின்,
நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த திகதி :----.

8.

(கழற்ற முடியாதவாறு பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும்)

கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி :----.
(iii) செலுத்திய கட்டணம் :----.

9. விண்ணப்பதாரரது சான்றிதழ்.- இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட விபரங்கள் உண்மையானதெனவும், சரியானதெனவும் உறுதிப்படுத்துகின்றேன். பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் இலக்கம் ............................ மற்றும் ........................... ஆந் திகதிய பற்றுச்சீட்டினை இதில் இணைத்துள்ளதாக பிரதிக்கினை செய்கின்றேன். பரீட்சைகள் ஆணையாளர் மூலம் நடாத்தப்படும் சட்டதிட்டங்களுக்கிணங்க செயலாற்றுவதற்கும், இப்பரீட்சை சம்பந்தமான நிபந்தனைகளுக்கும் இணங்க நான் தகைமையற்றவன் எனத் தெரியவந்தால், பரீட்சைக்கு முன்னர் அல்லது பின்னர் எனது பரீட்சார்த்தி தகைமையை இரத்துச்செய்வதற்கு எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்திற்கும், நியமனம் பெற்ற பின்னர் தெளிவாயின், நான் இழப்பீடின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் இணங்குகின்றேன்.

----,
விண்ணப்பதாரரது கையொப்பம்.

திகதி :----.

9-845

---

## கமத்தொழில் அமைச்சு

### இலங்கைத் தொழில்நுட்பசேவையின் அலுவலர் தரம் III இல் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளுவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012

மேற்குறித்த பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளுவதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தகுதியுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பரீட்சைகள் ஆணையாளரினால் நடாத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சைகளில் பெற்றுக்கொள்ளுகின்ற பெறுபேறுகளுக்கிணங்க திறமை அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள பரீட்சார்த்திகள் கமத்தொழில் அமைச்சில் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் பதவி தரம் III இல் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் பொருட்டு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**வயதெல்லை.**- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

(அ) தரம் III :

**கல்வித் தகைமைகள்.**- (i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களிலும் மேலும் ஒரு பாடத்திலும் திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல்.

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தூய கணிதம்/பிரயோக கணிதம்/ இணைந்த கணிதம், பௌதீக விஞ்ஞானம் அடங்கலாக ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல்.

**தொழில் தகைமைகள்.**- இங்கு 'அ' இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடன் கீழ்க்காணும் ஒரு தொழில் தகைமையை ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பெற்றிருத்தல் வேண்டும் :-

(i) மொரட்டுவைப் பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரி வழங்கும் தேசிய தொழில்நுட்பம் பற்றிய பாடநெறிச் சான்றிதழ் ;

அல்லது

(ii) தேசிய பயிலுநர் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகம் வழங்கும் தேசிய பொறியியல் பற்றிய பாடநெறிச் சான்றிதழ் ;

அல்லது

(iii) கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சு வழங்கும் தேசிய உயர் பொறியியல் பற்றிய பாடநெறிச் சான்றிதழ் ;

அல்லது

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகம் வழங்கும் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி பற்றிய சான்றிதழ் ;

அல்லது

(v) இலங்கை பொறியியலாளர் நிறுவகம் நடாத்தும் பொறியியல் பரீட்சையின் முதலாம் பாகத்தை வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல் ;

அல்லது

(vi) மேற்குறித்த தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகல விதத்திலும் சமனானது என இலங்கைத் தொழில்நுட்ப சேவைச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தகைமைகள்.

**கல்வித் தகைமைகள்.**- க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் குறித்த துறைக்குரிய இரண்டு பாடங்கள் அடங்கலாக மூன்று விஞ்ஞான பாடங்களில் சித்தி அடைந்திருத்தலும் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் மொழி

அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் அடங்கலாக மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி அடைந்திருத்தலும்.

**தொழில் தகைமைகள்**.- மேற்குறித்த அடிப்படைத் தகைமைகளுடன் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் குறித்த தொழில் துறைக்கு உரிய தேசிய தொழில்நுட்ப பாடநெறி (மூன்று வருட பகுதி நேரப் பயிற்சிப் பாடநெறி) பற்றிய சான்றிதழைப் பெற்றிருத்தல்.

திறந்த போட்டிப் பரீட்சையில் தொழில்நுட்ப சேவைப் பயிற்சித் தரத்திற்கு தகைமை பெறும் விண்ணப்பதாரிகள் குறித்த சேவைக்கு உரிய பாடவிதானத்திற்கு இணங்க பெற்றுக்கொள்ளப்படும் ஒரு வருட கோட்பாடும் செயன்முறையும் அடங்கிய பயிற்சியை வெற்றிகரமாக நிறைவுசெய்து உரிய பரீட்சையில் சித்தி அடைந்தமை தொடர்பில் வழங்கப்படும் ஒரு சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் தரம் III இனது சம்பள அளவுத் திட்டத்தின் ஆரம்பப் படிமுறையில் அமர்த்தப்படுவார்கள்.

பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தி அடையத் தவறினால், அவ்வாறு சித்தி அடையத் தவறிய பயிலுநர்களுக்கு 6 மாதத்திற்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு தனது பயிற்சிக் காலத்தை நீடித்துக்கொள்ளுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும். அவ்வாறு நீடிக்கப்படும் கால இறுதியில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தி அடையத் தவறும் பட்சத்தில் பயிலுநர்கள் சேவையிலிருந்து இடைநிறுத்தப்படுவார்கள்.

**சம்பள அளவுத் திட்டம்**.- தரம் III- 06/2006 ஆம் இலக்கப் பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் MN3-2006 A- ரூ. 15,005 - 180 x 4 - 240 x 6 - 320 x 11 - 360 x 20 - ரூ. 27,855 ஆகும்.

4 ஆவது சம்பள ஏற்றத்திற்கு முன்னர் முதலாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் சித்தி அடைதல் வேண்டும் என்பதுடன், நியமனம் பெற்று 5 வருட காலம் கழிவதற்கு முன்னர் 2007.05.28 ஆந் திகதிய 7/2007 ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் அரச கரும மொழிகள் பற்றிய திறனை அடைதலும் வேண்டும்.

**சேவையில் ஈடுபடுத்துவது பற்றிய நிபந்தனைகள்**.- இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதும் ஆகும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் கமத்தொழில் அமைச்சுக்கு இணைக்கப்படுவார்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் நாட்டின் சகல பாகங்களிலும் பணியாற்ற வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு அமைய நியமிக்கப்படுவார்கள். ஏற்கனவே அரசாங்க சேவையில் பணியாற்றும் அலுவலர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் ஒரு வருட கால பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் தாபன விதிக்கோவையிலும் நிதிப்பிரமாணக் குறிப்பிலும் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கும் மற்றும் பொது நிருவாகச் சுற்றறிக்கை மூலம் அவ்வப்பொழுது விடுக்கப்படும் கட்டளைகளுக்கும் திணைக்களத்தின் அறிவுரைகளுக்கும் இயைந்தொழுக வேண்டும்.

(i) *ஆட்சேர்ப்பு நடைமுறை*.- இந்தப் பரீட்சை தொழில்நுட்ப சேவை சபையின் மேற்பார்வையில் பரீட்சைகள் ஆணையாளர் திணைக்களத்தினால் 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.

(ii) *பரீட்சைத் திட்டம்*.- இந்தப் பரீட்சை சிங்கள மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

பரீட்சைக்குத் தோற்றுகின்ற பரீட்சார்த்திகள் சகல வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடைகளை அளித்தல் வேண்டும்.

பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளரினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் இயைந்தொழுக வேண்டும். பரீட்சை சம்பந்தமான ஒழுங்குவிதிகளை மீறுகின்ற பரீட்சார்த்திகளுக்கு ஆணையாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

(iii) *பரீட்சையின் பாடங்கள்*.- இந்தப் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டு அமைந்ததாகும் :

நுண்ணறிவு சம்பந்தமான வினாத்தாள்
தொழில்நுட்பம் சம்பந்தமான வினாத்தாள்

பாடவிதானம் :

நுண்ணறிவு சம்பந்தமான வினாத்தாள் (காலம் : 1 மணித்தியாலம்) : - மொத்தப் புள்ளிகள் 100

பரீட்சார்த்திகள் சிந்தனைத் திறனையும், விவாத ரீதியில் சிந்தித்து பகுப்பாய்வு செய்யும் திறனையும் தீர்மானமெடுக்கும் ஆற்றலையும் நிர்ணயிக்கும் வகையில் அமைத்த வினாக்கள் இதில் அடங்கும்.

தொழில்நுட்பம் சம்பந்தமான வினாத்தாள் (காலம் : 3 மணித்தியாலம்) : - மொத்தப் புள்ளிகள் 100

கட்டிட நிர்மாணக் கோட்பாடுகள், நிர்மாணப் பணிகளுக்கான வரைவுத் திட்டங்களைத் தயாரித்தல், வாசித்துப் புரிந்துகொள்ளும் ஆற்றல், நீர் விநியோக, நீர்ப்பாசன நடவடிக்கைகள், கழிவகற்றல் செயற்பாடுகள் என்பன தொடர்பில் பரீட்சார்த்தியிடமுள்ள ஆற்றல்களை நிர்ணயிக்கும் வகையில் அமைந்த வினாக்கள் இதில் அடங்கும்.

மேற்குறித்த ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளை மாத்திரம் தேர்ந்தெடுத்து அவர்களின் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் ஒரு முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்படும்.

மேற்குறித்த வினாத்தாள்களுக்கு விடையளிக்கும் பொருட்டு தேவையான பரீட்சை உபகரணங்களையும் துணைப் பாகங்களையும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபங்களுக்கு எடுத்து வருதல் வேண்டும்.

**பொய்யான தகவல்களுக்கான தண்டனைகள்**.- விண்ணப்பப்படிவத்தை நிரப்பும்போது மிகவும் கவனமாக வாசித்து சரியான

தகவல்களை வழங்குதல் வேண்டும். இந்தப் பரீட்சையின் ஒழுங்குவிதிகளுக்கும் நியதிகளுக்கும் அமைய எவரேனுமொரு பரீட்சார்த்தி தகுதியற்றவர் எனத் தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்திலோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தித் தன்மை இரத்துச்செய்யப்படலாம். விண்ணப்பதாரி சமர்ப்பித்த ஏதாவதொரு தகவல் பிழையானது எனக் கண்டறியப்பட்டால் அவர் எந்த சந்தர்ப்பத்திலும் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படலாம். பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படுவதனால் மாத்திரம் அந்தப் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் எனக் கருதப்பட மாட்டாது.

**பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் ரூ.500 ஆகும். இந்தப் பணத்தொகையை பரீட்சைகள் ஆணையாளரின் 2003-02-13 என்ற வருமானத் தலைப்பின் கீழ் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் அல்லது மாவட்ட செயலாளர் அலுவலகத்திலும் செலுத்தலாம். பணம் செலுத்தப்பட்டமை தொடர்பில் விநியோகிக்கப் படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூண்டினுள் கழறாதவண்ணம் ஒட்டுதல் வேண்டும். (அந்தப் பற்றுச்சீட்டின் ஒரு பிரதியை மேலும் பிரயோசனத்தின் நிமித்தம் தம்மிடம் வைத்துக் கொள்ளுதல் சிறந்தது.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது. காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**விண்ணப்பிக்கவேண்டிய முறை.**- (அ) விண்ணப்பப்படிவம் ஏ4 (செ. மீ. 21 x 29) (சாதாரண ஹாப்f சீட்டு) அளவான கடதாசியைப் பயன்படுத்தி-

(i) 1 முதல் 3 வரையான பந்திகள் முதல் பக்கத்திலும்,

(ii) 4 முதல் ஏனைய பந்திகள் மறுபக்கத்திலும் அமையும் வகையில் விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(iii) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் தகவல்களை உள்ளடக்கி முழுமையாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் ஒரு பிரதியை விண்ணப்பதாரி தன்னிடம் வைத்துக்கொள்ளுவது பயனுள்ளதாகும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல்கள் அடங்கிய அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படி வத்திற்கு இனங்காணப்படுகின்றனவா என்பதை விண்ணப்ப தாரிகள் நிச்சயப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு நிச்சயப்படுத்திக் கொள்ளாவிடில் விண்ணப்பப்படிவங்கள் இரத்துச்செய்யப்படலாம். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது அந்த விண்ணப்பப்படிவத்தின் ஆரம்பத் தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள மொழிமூல விண்ணப்பப்படிவத்தில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழிமூல விண்ணப்பப் படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஆ) பரீட்சையின் நிமித்தம் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பதிவுத்தபால் மூலம் 2012, திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் :-

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கை பரீட்சைகள் திணைக்களம்,
பெலவத்தை, பத்தரமுல்லை.

விண்ணப்பப்படிவத்தைத் தாங்கிவரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், கமத்தொழில் அமைச்சில் "இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் தரம் III இல் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளுவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012" என எழுதப்படுதல் வேண்டும். விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

(இ) விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை களை அனுப்பிவைத்ததும் அதுபற்றிய ஒரு அறிவித்தலை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் செய்திப் பத்திரிகை களில் வெளியிடும். அந்த அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்களின் பின்னர் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கவில்லை எனில், அறிவித்தலில் குறிப்பிடப் பட்டவாறு அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத் திற்கு அறியப்படுத்துதல் வேண்டும். உங்களிடம் நீங்கள் வைத்துக்கொண்டிருந்த விண்ணப்பப்படிவத்தினதும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் சான்றுபடுத்திய பிரதிகளையும், பதிவுத்தபால் பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு வெளிப்பிரதேசமாயின் அனுமதி அட்டையை தொலைநகலில் அனுப்பிவைக்கக்கூடிய தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு உங்களின் வேண்டுகோள் கடிதத்தின் ஒரு பிரதியை உங்களிடம் வைத்துக் கொண்டு அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறியப்படுத்துவது மிகவும் பயனுள்ளதாகும்.

12. பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை நிரூபிக்கும் பொருட்டு கீழ்க்காணும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மண்டப மேற்பார்வை யாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும் :-

(1) ஆட்களைப் பதிவுசெய்கின்ற திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட செல்லுபடியான தேசிய அடையாள அட்டை ;
(2) செல்லுபடியான பிரயாணக் கடவுச்சீட்டு ;
(3) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

13. இதில் குறிப்பிடப்படாத ஏதாவது விடயமிருப்பின், அதுபற்றி கமத்தொழில் அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும். சகல விண்ணப்பதாரிகளும் இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை பற்றிய பொதுவான ஒழுங்குவிதிகளுக்கு இணங்க பரீட்சார்த்திகள் இயைந்தொழுக வேண்டும்.

டபிள்யு. சகலசூரிய,
செயலாளர்,
கமத்தொழில் அமைச்சு.

கமத்தொழில் அமைச்சு,
2012, செத்தெம்பர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கமத்தொழில் அமைச்சு**

இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் தரம் III இல் நிலவும் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளுவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
(உரிய இலக்கத்தை கூண்டினுள் எழுதுக)

விண்ணப்பிக்கும் நகரம் :
III ஆம் தரம் - 1
பயிலுநர் தரம் - 2
(உரிய இலக்கத்தை கூண்டினுள் எழுதுக)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) : ----.
உ-ம் : PERERA, A.B.C.

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 தே. அ. அ. இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 அனுமதி அட்டையை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

2.4 தபால் அலுவலக நகரம் :----.

3. 3.1 பால் :
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தை கூண்டினுள் எழுதுக)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ நாள் ☐☐

3.3 2012.09.24 இற்கு வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. கல்வித் தகைமைகள் :
4.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரம் :

(i) பரீட்சையின் ஆண்டும் மாதமும் :----.
(ii) பரீட்சையின் சுட்டெண் :----.
(iii) பெறுபேறுகள் :

| பாடம் | பெற்ற தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

4.2 க. பொ. த. (உ. த.) பரீட்சை பற்றிய விபரம் :

(i) பரீட்சையின் ஆண்டும் மாதமும் :----.
(ii) பரீட்சையின் சுட்டெண் :----.
(iii) பெறுபேறுகள் :

| பாடம் | பெற்ற தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

5. தொழில்நுட்ப தகைமைகள் :

| நிறுவனம் | பின்பற்றிய பாடநெறி | காலப்பகுதி | சித்தி | சான்றிதழ் பத்திரத்தின் இலக்கமும் திகதியும் |
|---|---|---|---|---|
| | | | | |

6. ஏனைய தகைமைகள் :----.

7. ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள ஒரு அலுவலராயின்,

7.1 திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயர் :----.

7.2 தற்பொழுது வகிக்கும் பதவி :----.

7.3 சேவைக்காலம் :----.

7.4 நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய பதவி அல்லது தற்காலிக பதவி :----.

8. நீங்கள் எப்பொழுதாவது ஏதாவதொரு குற்றத்தின் பேரில் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் கணிக்கப்பட்டுள்ளீர்களா ? : ----.
(உரிய கூண்டினுள் ✓ என்ற அடையாளத்தை இடுக.)
(ஆம் எனின் விபரங்களைக் குறிப்பிடுக.) :

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

9. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு பற்றிய விபரம் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்தப்பட்ட தொகை :----.

பற்றுச்சீட்டை கழறாதவண்ணம் ஒட்டுக.

10. **விண்ணப்பதாரியின் உறுதியுரை** :

(அ) இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் உறுதியுரைக்கின்றேன். இதில் ஏதாவது பாகம் பூர்த்தியாக்கப்படாததன் பேரில்/ தவறாகப் பூரணப் படுத்தப்பட்டதன் பேரில் நேரிடக்கூடிய அசௌகரியங்களை ஏற்றுக்கொள்ள உடன்படுகின்றேன். மேலும் இதிலுள்ள சகல பகுதிகளும் முழுமையாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ளன எனவும் உறுதிமொழிகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இந்த உறுதியுரை பொய்யானது என நிரூபிக்கப்பட்டால் நியமனத்திற்கு முன்னர் நான் தகுதியற்றவனாவேன் என்பதையும், நியமனம் பெற்ற பின்னர் கண்டறியப்பட்டால் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

(இ) மேலும் பரீட்சை நடாத்துவது சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதி களுக்கு இயைந்தொழுகுவேன் எனவும்,

(ஈ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றுவதற்கு அபிப்பிராயமில்லை எனவும் உறுதியுரைக் கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்** :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .......................................... என்பவரை தனிப்பட்ட முறையில் நான் நன்கறிவேன் எனவும் அவர் என் முன்னிலையில் .................. ஆந் திகதி கையொப்பத்தை இட்டார் எனவும், குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும், அந்தப் பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது எனவும் சான்றுபடுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின்
கையொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(அலுவலக முத்திரையிட்டு உறுதிப்படுத்துக.)

9-1261

---

**குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்கள் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2012/2013**

## Department of Immigration & Emigration Limited/ Open Competitive Examination for the Recruitment to the Posts of Authorized Officers - 2012/2013

இலங்கை குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு பின்வரும் தகைமைகளையுடைய இலங்கைப் பிரசைகளிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. போட்டிப் பரீட்சையில் பெறும் புள்ளிகளின் ஒழுங்குமுறை அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெறுவதுடன், வெற்றிடங்களில் (60%) வீதம் திறந்த போட்டிப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படை யிலும், மிகுதி (40%) அரச சேவை/மாகாண அரச சேவையில் உள்ளவர் களுக்காக நடாத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறு களின் அடிப்படையிலும் நிரப்பப்படும். அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையில் 10% மாத்திரம் பெண் உத்தியோகத்தர் களுக்காக ஒதுக்கப்படும்.

2. **விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல்**.- இந்த வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப 'ஏ4' அளவுள்ள (சென்றி மீற்றர் 21 x 29) தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பதாரியால் விண்ணப்பப் படிவம் தயாரித்துக்கொள்ளப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 1 தொடக்கம் 5 வரை முதல் பக்கத்திலும் 6 தொடக்கம் 12 வரை இரண்டாம் பக்கத்திலும் எஞ்சியுள்ள வற்றை மூன்றாம் பக்கத்திலும் உள்ளடக்கப்படும் வகையில் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன் அதற்குரிய தகவல்களை தமது சொந்தக் கையெழுத்தினால் தெளிவாக குறிப்பிடல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்தில்லாத விண்ணப்பங்களும், தகவல்கள் முழுமையாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் எதுவித அறிவித்தலு மின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் பிரதியொன்றை வைத்துக் கொள்ளல் பயனுடையதாக அமையலாம். அத்துடன் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சைக்கான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததாக இருத்தல் வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதனை கவனத்திற் கொள்க. விண்ணப்பப்படிவத்தை நிரப்பும்போது விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் காணப்படும் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் கட்டாயமாகும். பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2012.10.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு ''பரீட்சை ஆணையாளர் நாயகம். ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை'' என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.-

(அ) திறந்த போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பிக்கும்போது ''இலங்கை குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012/2013'' எனவும், மட்டுப்படுத்தப் பட்ட போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பிக்கும்போது ''இலங்கை குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கான மட்டுப்படுத்தப் பட்ட போட்டிப் பரீட்சை 2012/2013'' எனவும், திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட இரண்டிற்கும் விண்ணப்பிப்பதற்கு தகைமைபெறும் பட்சத்தில் ஒரு விண்ணப்பப்படிவத்தி னூடாக மாத்திரம் விண்ணப்பித்தல் வேண்டும். இதன்போது

''இலங்கை, குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கான திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2012/2013 என விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஆ) அரச சேவை/ மாகாண சேவைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவரின் ஊடாக குறித்த திகதிக்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் அல்லது அது தொடர்பான எந்த ஒரு ஆவணமோ தபாலில் காணாமற் போதல் அல்லது தாமத மடைதல் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட மாட்டாது.

(ஈ) உரிய மாதிரிப்படிவத்திற்கு அமைவாக இல்லாத அல்லது முழுமையாக பூர்த்திசெய்யப்படாத மற்றும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

*3.* ***ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்***.- தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும், பரீட்சை மண்டப கண்காணிப்பாளர் திருப்திப்படும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழ்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

*4.* ***பொய்யான தகவல்கள்***.- எந்தவொரு விண்ணப்பதாரியும் தகுதியற்றவர் என நிரூபிக்கப்படும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் சமயத்திலோ, பரீட்சைக்குப் பின்னரோ அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தித் தகுதியை நிராகரிப்பதற்கு இடமுண்டு. விண்ணப்பதாரி ஒருவரினால் வழங்கப்பட்ட தகவல் அவருடைய அறிவுக்கு எட்டியவரை பொய்யெனத் தெரியவந்தால் அல்லது அவர் முக்கிய விடயமொன்றை வேண்டுமென்று மறைத்துவிட்டார் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் அரச சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு இடமுண்டு.

*5.* ***சம்பள அளவுத்திட்டம்***.- இந்தப் பதவிக்குரிய ஒன்று திரட்டப்பட்ட சம்பள அளவுத்திட்டம் பொ. நி. சு. 6/2006 (iv) இன் எம்எஸ் 5-2006ஏ- ரூ. 16,720 - 10 x 320 - 11 x 365 - 15 x 450 - ரூ. 30,685 ஆகும். இச்சம்பளம் மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமையவே வழங்கப்படும். பதவிக்கு நியமிக்கப்பட்டு 4 ஆவது சம்பள ஏற்றத்திற்கு செல்லமுன் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

*6.* ***பரீட்சைக் கட்டணம்***.- திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட இரண்டு பரீட்சைகளுக்கும் தோற்றும் பட்சத்தில் பரீட்சைக் கட்டணம் ரூபா 1,000 ஆகும். திறந்த அல்லது மட்டுப்படுத்தப்பட்ட ஏதாவது ஒரு பரீட்சைக்கு மாத்திரம் தோற்றும் பட்சத்தில் பரீட்சைக் கட்டணம் ரூபா 800 ஆகும். இந்தக் கட்டணத்தை எந்தவொரு மாவட்டச் செயலகத்திலும் அல்லது பிரதேச செயலகத்திலும் வருமானத் தலைப்பு 2003-02-13 என்ற கணக்கில் வைப்பிலிட்டு அதற்காகப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் ஒட்டவும். (பற்றுச்சீட்டு இலக்கம், திகதி மற்றும் செலுத்தப்பட்ட அலுவலகம் ஆகியவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும்.) எக்காரணத் திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது. (பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்வது பயனளிக்கலாம்.)

*7.* **வயதெல்லை**.- திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது 21 இற்குக் குறையாமலும் 35 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்போது மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதன்று.

***குறிப்பு***.- விண்ணப்பதாரியின் உடல் தேர்ச்சியில் முக்கிய கவனம் செலுத்தப்படுவதுடன் அது பின்வருமாறு அமைதல் வேண்டும். ஆண் விண்ணப்பதாரிகளின் உயரம் குறைந்தபட்சம் 5' 4'' (செ. மீ. 162.5) மற்றும் மார்புச் சுற்றளவு 32'' ஆகவும் காணப்படுதல் வேண்டும். பெண் விண்ணப்பதாரிகளின் உயரம் குறைந்தபட்சம் 5' 2'' (செ. மீ. 156) ஆகக் காணப்படுதல் வேண்டும்.

*8.* ***சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்***.- (i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். புதிதாக இப்பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்படுவோர் அரசாங்கத்தால் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் வீதத்திற்கு அமைய விதவைகள், அநாதைகள்/ தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதிக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். நியமனம் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும்.

2009.02.20 ஆந் திகதிய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட இலக்கம் 1589/30 உடைய நடவடிக்கை முறை ஒழுங்கு விதிக்கோவையின் உறுப்புரைகள் தொடர்புடையதாகக் காணப்படும்.

(ii) அரச சேவையில்/மாகாண அரச சேவையில் கடமையாற்றுவோர் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் அவர்கள் தமது பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருப்பின் 1 வருட பரீட்சித்தல் காலத்தின்கீழ் நியமிக்கப்படுவர்.

(iii) பொ. நி. சு. 7/2007, 7/2007(i) இன் பிரகாரம் நியமனத் திகதியிலிருந்து 5 வருட காலத்திற்குள் இரண்டாவது அரச மொழியில் தேர்ச்சி பெறுதல் வேண்டும். அவ்வாறு தேர்ச்சிபெறத் தாமதம் ஏற்படும் உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றம் இடைநிறுத்தம் செய்யப்படும்.

(iv) தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் கட்டாயமாக விமான நிலையங்களிலும், துறைமுகங்களிலும் இரவுக் கடமைகளில் பணியாற்றுதல் வேண்டும்.

*9.* ***கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்***.- (அ) திறந்த போட்டிப் பரீட்சை.- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பட்டத்துடன் க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தியுடன் அல்லது தே. பொ. க. ச. பரீட்சையில் ஆங்கில மொழியில் ''பீ'' சித்தியடைந்துள்ள இலங்கை ஆண்/பெண் இருபாலாரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

(ஆ) **மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை**.- பொ. நி. சுற்றறிக்கை இலக்கம் 6/2006 (iv) இன் பிரகாரம் எம்என்-1 அல்லது அதற்கு மேற்பட்ட அளவுத்திட்டத்திற்குரிய சம்பளம் பெறும் பதவி ஒன்றில் பத்து (10) வருட வினைத்திறனுள்ள சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்த அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு/ மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கு இப்பதவிக்காக விண்ணப்பிக்க முடியும்.

(i) க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் 2 அமர்வுகளுக்கு மேற்படாதவாறு கணிதம், ஆங்கிலம் மற்றும் சிங்களம்/தமிழ் மொழிகள் உள்ளிட்ட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;

மற்றும்

(ii) க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் பொது அறிவுப் பரீட்சை தவிர்ந்த வேறு ஏதேனும் ஒரு பாடத்திலேனும் சித்தியடைந் திருத்தல் அவசியமாகும் ;

10. விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதி களை தேவைப்படும்போது சமர்ப்பிப்பதற்காக தயாராக வைத்திருத்தல் வேண்டும் :

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) பெற்றுக்கொண்டுள்ள ஆக்ககூடிய கல்விச் சான்றிதழ் ;
(iii) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சான்றிதழ்கள் இரண்டு.

11. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சையின் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% புள்ளிகள் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளின் மொத்த கூட்டுத்தொகை கவனத்திற்கொள்ளப்பட்டு, அதன் பிரகாரம் வரிசைப்படுத்தப்பட்ட முன்னுரிமை ஆவணத்தின் அடிப்படையில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றின் மூலம் நடாத்தப்படும் தகைமைகளைப் பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சையின் பின்னர் ஆட்சேர்ப்பு செய்யப்படும். (நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

(i) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஆகிய மூன்று மொழிகளிலும் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படுவதுடன், பரீட்சை நடைபெறும் திகதி பரீட்சை ஆணையாளரினால் அறிவிக்கப்படும். விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(ii) பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகள் அவர்களின் விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு தபாலில் அனுப்பப்படும். பரீட்சைகள் நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவதுடன், இந்த ஒழுங்குவிதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் ஆளாகுவர்.

(iii) விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் மொழி ரீதியான முரண்பாடுகள் ஏற்படின் சிங்கள மொழியே மேலோங்கி நிற்கும்.

(iv) பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்கான நுழைவுப் பத்திரமொன்றினை வழங்குதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்று கருதக்கூடாது.

12. **பாடத்திட்டம்**.- (அ) திறந்த போட்டிப் பரீட்சை :

(i) நுண்ணறிவு மற்றும் பொது அறிவு (காலம் : 1 மணித்தியாலம்) - மொத்தப் புள்ளிகள் 100.
விண்ணப்பதாரர்களின் தர்க்க ரீதியான அறிவு, கணித ரீதியான திறமைகள், விவேகம் மற்றும் முடிவு செய்யும் ஆற்றலை அளத்தல், அண்மைக்கால இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் ரீதியான தகவல்கள் மற்றும் சர்வதேச அரசியல், விஞ்ஞானம், தொழினுட்பத் துறைகள் பற்றிய அறிவு, புதிய விஞ்ஞான ரீதியான கண்டுபிடிப்புக்கள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்ட சிறு குறிப்பு மற்றும்/ அல்லது பல்தேர்வு வினாப்பத்திரம் ஒன்று. சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(ii) ஆங்கில மொழி (காலம் : 2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்.
வாசித்தல் மூலம் கிரகித்தல், கருத்தினை வெளிப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் திறன் என்பவற்றினை பரீட்சிக்கும் வினாப்பத்திரம் ஒன்று. சகல வினாக்களுக்கும் விடை யளித்தல் வேண்டும்.

(iii) கணனி தொடர்பான அடிப்படை அறிவு (காலம் : 1 மணித்தியாலம்) - புள்ளிகள் 100.
கணனி தொடர்பான அடிப்படை அறிவு Ms word, Ms excel போன்ற மென்பொருள் பாவனை பற்றிய அறிவினை மதிப்பிடுவதற்கான வினாப்பத்திரம் ஒன்று. சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(ஆ) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை :

(i) கிரகித்தலும் பொது அறிவும் (காலம் : 2 மணித்தியாலங்கள்) - மொத்தப் புள்ளிகள் 100.
கருத்துக்கூறும் திறமை, சுருக்கம், பந்திகளைப் புரிந்துகொள்ளும் திறமை, தீர்மானங்களை மேற்கொள்ளும் திறமை, அண்மைக்கால இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் ரீதியான தகவல்கள் மற்றும் சர்வதேச அரசியல், விஞ்ஞானம், தொழினுட்பத் துறைகள் பற்றிய அறிவு, புதிய விஞ்ஞான ரீதியான கண்டுபிடிப்புக்கள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்ட வினாப்பத்திரம் ஒன்று. சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(ii) ஆங்கில மொழி (காலம் : 2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்.
வாசித்தல் மூலம் கிரகித்தல், கருத்தினை வெளிப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் திறன் என்பவற்றினை பரீட்சிக்கும் வினாப்பத்திரம் ஒன்று. சகல வினாக்களுக்கும் விடை யளித்தல் வேண்டும்.

(iii) கணனி தொடர்பான அடிப்படை அறிவு (காலம் : 1 மணித்தியாலம்) - புள்ளிகள் 100.
கணனி தொடர்பான அடிப்படை அறிவு Ms word, Ms excel போன்ற மென்பொருள் பாவனை பற்றிய அறிவினை மதிப்பிடுவதற்கான வினாப்பத்திரம் ஒன்று. சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

13. பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை அனுப்பியவுடன் அதுபற்றி இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கழிந்த பின்னர் பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்களிடம் வைத்துக்கொண்ட விண்ணப்பத்தினதும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் உறுதிசெய்யப்பட்ட பிரதிகள் மற்றும் பதிவுத்தபால் செய்த பற்றுச்சீட்டினையும் கொழும்புக்கு வெளியே ஒரு பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்கு பெக்ஸ் இலக்கம் ஒன்றினையும் குறிப்பிட்டு, உங்களது கோரிக்கைக் கடிதத்தினையும் தம்வசம் வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பது சிறந்ததாகும்.

14. அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையும், அவை நிரப்பப்படும் திகதியும் குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகம் அவர்களினால் தீர்மானிக்கப்படும் அத்துடன் போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைகளில் சித்தி எய்திய பரீட்சார்த்திகளில் ஒருவருக்கோ அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையினருக்கோ நியமனம் வழங்கப்படாமல் இருக்கும் உரிமை குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு உண்டு.

15. இந்த வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) பந்தியில் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகள் மற்றும் பரீட்சார்த்திகளுக்கான சட்டதிட்டங்கள், மதியுரைகள் இந்தப் பரீட்சைக்கும், ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கும் பொதுவானவையாக அமையும் என்பதனையும் கவனத்திற்கொள்க.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் இல. 1733/52 மற்றும் 2011.11.25 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின்படியான அதிகாரத்தின் பிரகாரம்.

டபிள்யூ. ஏ. சி. பெரேரா,
குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகம்.

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்,
இல. 41, ஆனந்த ராஜகருணா மாவத்தை,
கொழும்பு 10.
2012, செத்தெம்பர் 21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2012/2013**

Department of Immigration & Emigration Limited/Open Competitive Examination for the Recruitment to the Posts of Authorized Officers - 2012/2013

☐
(அலுவலக உபயோகத்திற்கு)

நீங்கள் விண்ணப்பிக்கும் பரீட்சை :

மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை-1
திறந்த பரீட்சை-2
மட்டுப்படுத்தப்பட்ட/திறந்த
இரண்டிற்கும்-3 ☐
(பொருத்தமான இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐
(பொருத்தமான இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

1. பெயர் :----.

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில், முதலெழுத்துக்களை இறுதியில் இடவும்) :----.
(உதாரணம் : RANJITH, S. A.)

1.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

1.3 முழுப்பெயர் முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2.

2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில், இந்த முகவரிக்கே பரீட்சைக்கான அனுமதி அட்டை தபாலில் அனுப்பப்படும்.)

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2.4 தொலைபேசி இலக்கம் (இருப்பின்) :----.

3. பால் :
ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

4. இனம் :

(சிங்களவர்- 1, இலங்கைத் தமிழர் - 2, இந்தியத் தமிழர் - 3, முஸ்லிம்- 4, பர்கர் - 5) ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

5. விவாக நிலை-
விவாகமானவர் - 2
விவாகமாகாதவர் - 1 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

6. பிறந்த திகதி :

வருடம் ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

2012.10.31 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

7. இந்தப் பதவிக்காக தகைமை பெறும் பரீட்சையில் சித்தியடைந்த மொழி :----.

8. கல்வித் தகைமைகள் :

(i) பட்டப் படிப்பு :----.
(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சை :
ஆண்டு :----.

| பாடங்கள் | சித்திகள் |
|---|---|
| | |

9. உடல் தகைமைகள் :
(i) உயரம் (செ. மீ.) :----.
(ii) மார்பின் சுற்றளவு (செ. மீ.) :----.

10. தற்போது வகிக்கும் பதவி பற்றிய விவரம் :

(அ) பதவி :----.
(ஆ) திணைக்களம்/அமைச்சு :----.
(இ) முதல் நியமனத் திகதி :----.
(ஈ) பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :----.
(உ) சம்பளத் திட்டம் :----.
(ஊ) தற்போது பெறும் வருடாந்த சம்பளம் :----.

11. யாதேனுமொரு குற்றச்சாட்டின் பேரில், நீர் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் குறிப்பிடப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் விபரம் தருக :----.

12. நீர் அரச சேவையில் பதவியொன்றை வகித்திருந்த நிலையில் அதிலிருந்தும் விலக்கப்பட்டுள்ளீரா ? :----.

13. பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் :

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும் (பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்துக்கொள்ளவும்.) |

**கவனிக்க**.- வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை மேற்படி கூட்டினுள் கழராதவாறு ஒட்டவும்.

பற்றுச்சீட்டு இலக்கம் :----.
செலுத்திய அலுவலகம் :----.
திகதி :----.
தொகை :----.

14. இங்கே குறிப்பிட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டியவாறு உண்மை எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட இலக்கம் ................................... மற்றும் ............................... திகதிய பற்றுச்சீட்டு இங்கே ஒட்டப்பட்டுள்ளது எனவும் உறுதியளிக்கிறேன். மேலும் பரீட்சை ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடந்துகொள்வதற்கும், இந்தப் பரீட்சை தொடர்பான நிபந்தனைகளுக்கு அமைய தகுதியற்றவர் எனக் கண்டுபிடிக்கப் படும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடக்கும் நேரத்திலோ அல்லது பரீட்சையின் பின்னரோ என்னுடைய பரீட்சார்த்தித் தன்மையை இரத்துச்செய்வதற்கு எடுக்கப்படும் எந்த ஒரு தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும், ஒழுங்குவிதிகளுக்கும் நான் கட்டுப்படுவதாகவும் உறுதியளிக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

15. (அ) **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணபத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ........................................................ நான் தனிப்பட்ட ரீதியில் அறிந்தவரெனவும், அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள் ளார் எனவும், அந்தப் பற்றுச்சீட்டை விண்ணபத்தில் ஒட்டியுள்ளார் எனவும், அவர் எனது முன்னிலையில் ........................................ ஆந் திகதி தனது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் உறுதிப் படுத்துகின்றேன்.

----,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்.

சான்றுப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

(ஆ) **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**
(மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி களுக்கு மட்டும்)

எனது இலக்கம் ................................

........................................................ பணியாற்றும் திரு./திருமதி/ செல்வி ........................................... என்பவர் ............................... பதவி வகிக்கின்றார் எனவும், அவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேற்படி விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் உறுதி செய் கின்றேன். இப்பதவிக்காக அவர் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் ................................ சேவையிலிருந்து அவர் விடுவிக்கப்படுவார்/ விடுவிக்கப்பட மாட்டார் என்பதையும் மேலும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திணைக்களத் தலைவரின் பதவி முத்திரை :----.
திகதி :----.

9-1264

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.